DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2021 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw25 /Pw1 / Ashokan/SI Of Police | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**17.12.2024.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது தளி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி, நீதிமன்ற காவலராக பணியாற்றி வருகிறேன். தளி காவல் நிலைய குற்ற எண்.523/2021 என்ற வழக்கில், சாட்சியான LW1 – மல்லேஷ் த/பெ.மல்லப்பா, , என்பவர் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமல் உள்ளார். அவருக்கு பலமுறை சம்மன் சார்பு செய்ய சென்றபோது சம்மன் வாங்க மறுத்துவிட்டார். நீதிமன்ற பணிகளுக்கு பாதிப்பு உண்டாக்கும் வகையில் சாட்சியம் அளிக்க வேண்டுமென்றே வராமல் நீதிமன்றத்தை புறக்கணித்து வருகிறார். ஆகையால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டி அவர் மீது பிணையில் விடக்கூடிய சாட்சியப் பிடியாணை கட்டளை பிறப்பிக்குமாறு இந்நீதிமன்றத்தை தாழ்மையுடன் பிரார்த்தித்து கொள்கிறேன்.

இந்த சாட்சி மூலமாக திருப்பட்ட சம்மன் **அ.த.சா.ஆ.1**, ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.2**, ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

ஓம்./−திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2021 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw3 / PW2 / Veerapathiraiah | Village | Mudukeadhotti |
| Father Name | Ulirappa | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**17.12.2024.**

**2ம் எதிரி ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்

நான் முதுகேதொட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவம் நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கைரேகை என்னுடையதுதான். இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் உள்ளமுதல் கைரேகை **அ.த.சா.ஆ.3,** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கைரேகை **அ.த.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இன்று ஆஜர் ஆகி உள்ள எதிரி மற்றும் ஆஜர் ஆகாத எதிரி எனக்கு தெரியும்.

இன்று ஆஜராகி உள்ள எதிரி எனது அண்ணன் மகன் ஆவார்.

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது ருத்திரப்பா என்பவருக்கு பின்பக்கம் முதுகு பகுதியில் அடிப்பட்டு இரத்தம் வந்துகொண்டிருந்தது.

நான் அவரை ஆம்புலன்சில் சிகிச்சைக்காக ஏத்தி விட்டேன் பிறகு அவரை விசாரித்த போது ஆஜர் எதிரிகள் தாக்கியதாக கூறினார்.

சம்பவ இடத்தில் இரத்தம் படித்த மண் மற்றும் இரத்தம் படியாத மண், மற்றும் கரி மருந்து வாடையுடன் உள்ள ஒரு துணி என் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

இந்த சாட்சி மூலமாக இரத்தம் படிந்த மண்ணின் மாதிரி **MOA1** ஆகவும் அதே பகுதியில் இரத்தம் படியாத மண்ணின் மரிதிரி **MOA2** அகவும், கரிமருந்துக்கு பயன்படுத்தப்படும் துணி ஒன்று கரிமருந்து வாடையுடன் **MOA3** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி ஆஜர் முதல் எதிரிக்கு கு.வி.மு.சா பிரிவு 317 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

எனக்கு எழுதபடிக்க தெரியாது.

எனக்கு பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது.

ஆனால் அங்கு இருந்த மேலே சொன்ன பொருட்களை போலீசார் கைப்பற்றி என்னிடம் கைநாட்டு பெற்று கொண்டார்கள்.

உங்களுக்கு என்ன சங்கதி எழுதியிருக்கிறது என்று குறிப்பிட்டு கூற இயலாது என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

**ஒம்./–திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**